| | | |
|---|---|---|
| சாட்சி : PW 3<br>திரு.ரகுநாதன்<br>த.பெ. திரு.தங்கராஜ் | அ.வ.எண்.380/2010 | 06.04.2026 |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

11) நான் எனது வீட்டுமனையை கிரையம் பெறும் போது சிதம்பரம் நகர் மனை வரைபடத்தை பார்த்து தான் நான் வீட்டுமனையை கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். எனது வீட்டு மனை எண் என்ன என்றால் மனை எண்.70, 71 ஆகும். மனை எண்.71 ற்கு மேல்புறம் ரோடு என்றால் சரிதான். மனை எண்.71 ற்கு தென்புறமும் கிழமேல் ரோடு உள்ளது என்றால் சரிதான்.

12) நான் கிரையம்பெற்ற கிரைய மனைக்கு கீழ்புறம் கடைசியாக உள்ள வீட்டு மனையின் எண்.67 என்றால் சரிதான். மேற்படி மனை எண்.67 ற்கு தென்புறம் தான் என் வீட்டுமனையில் இருந்து வரும் கிழமேல் ரோடு முடிகிறது என்றால் சரிதான். மனை எண்.67 ற்கு தென்புறத்தில் கிழமேலாக எந்த ரோடும் இல்லை என்றால் சரிதான், மனை எண்.67 ற்கு கீழ்புறத்தோடு மேற்படி கிழமேல் ரோடு முடிவடைகிறது என்றால் சரிதான்.

13) அவ்வாறு கிழமேல் ரோடு முடியும் இடத்தின் தென்புறத்தில் தென்வடல் ரோடு எதுவும் இல்லை என்றால் சரிதான். மனை எண்.67 ன் தென்புறத்தில் கிழமேல் அளவு 35 அடி என்றால் இருக்கும். மனை எண்.68 ன் கிழமேல் அளவு என்ன என்றால் 35 அடி தான். மனை எண்.67,68,69,70, 71 அனைத்திற்கும் கிழமேல் அளவு 35 அடி என்றால் தென்புறத்தில் 35 அடி தான். மனை எண்.67 ற்கு தென்புறத்தில் கீழ்புறம் எல்லையில் இருந்து மேல்புறம் தென்வடல் சாலையை அடைய 175 அடி

நீளம் என்றால் சரிதான். அதேபோல் வடபுறத்தில் எவ்வளவு அடி நீளம் என்றால் தென்புற அளவான 175 அடியை விட 10–15 அடி கூடுதலாக இருக்கும்.

14) எனது வீட்டு மனை எண்.71ன் மேல்புறத்தில் தென்வடல் அளவு என்ன என்றால் குறிப்பாக என்னால் சொல்லமுடியவில்லை. மேற்படி மனையின் கிழமேல் அளவு என்ன என்றால் 35 அடி. எனது வீட்டு மனை எண்.71ன் மேல்புறத்தில் தென்வடல் அளவு 75 அடி என்றால் இருக்கலாம். மனை எண்.67 ன் உரிமையாளர் அதிகபட்சமாக 400 அடி நடந்தாலே திருப்பஞ்ஞீலி பேருந்து நிலையத்திற்கு வந்துவிட முடியும் என்றால் 425 அடி இருக்கும்.

15) எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்து பாதை அடைப்பட்டுள்ளதால், பொதுமக்கள் ஒரு கி.மீ சுற்றி வரவேண்டிய சூழ்நிலை உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், 500 மீட்டர் இருக்கும். அப்படியானால் 1 கி.மீ என்று நான் சொல்லியுள்ளது தவறு தான் என்றால் தவறு தான். 1 மீட்டர் என்பது தோராயமாக 3–1/4 அடி என்றால் சரிதான். அப்படியானால் 500 மீட்டருக்கு 1500 அடி என்று நான் சொல்வது தவறு என்றால் தவறுதான்.

16) மனை எண்.67,68,69 ற்கு தென்புறத்தில் உள்ள மனைகள் வீடுகள் கட்டப்படாமல் கருவேல முள்கள் முளைத்துள்ளது என்றால் சரிதான். அப்பகுதியில் மக்கள் வசிப்பிடமும் இல்லை, பொதுமக்கள் நடமாட வழியும் இல்லை என்றால் சரிதான். சிதம்பரம் நகரில் வீடுகள் கட்டப்பட்ட பகுதி எனது வீட்டுமனைக்கு நேர் எதிரிலும் தென்புறம் நேர் எதிரிலும் மட்டுமே என்றால் தாவா சந்தை அடைத்துவிட்டதால் மேற்படி

சாலையை மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர்.

17) எனது வீட்டு மனைகளான மனை எண்கள்.71,72 ற்கு வடபுறமும், தென்புறமும், மேல்புறமும் சாலை உள்ளது என்றாலும், கீழ்புறம் சந்தும் உள்ளது என்றாலும் சரிதான். எனவே எனது வீட்டை சுற்றி 3 புறமும் சாலை உள்ள நிலையில், எனக்கு கீழ்புறம் பிரதிவாதிகள் சொத்தில் உள்ளதாக கூறும் சந்து வழியாக செல்லவேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்றால் மேற்படி சந்து இல்லாவிட்டால் சுற்றி எனது வீட்டிற்கு வரமுடியும், சந்து இருந்தால் சந்து வழியாக வருவோம்.

18) சாலை இருக்கும்பொழுது சந்து இருந்தால் சந்து வழியாக எனது வீட்டிற்கு வருவோம் என்று நான் சொல்வது வாதிக்கு ஆதரவான சாட்சியம் என்றால் சரியல்ல. அய்யன் வாய்க்கால், பெருவள வாய்க்கால் ஆகியவை எனது வீட்டில் இருந்து எவ்வளவு தொலைவில் இருக்கும் என்றால் 1/2 கி.மீட்டர். சிதம்பரம் நகர் வீட்டுமனை சுமார் 200 அடியிலேயே எனது வீட்டில் இருந்து தென்புறத்தில் முடிந்துவிடும் என்றால் சரியல்ல, கீழ்புறமே 200 அடி முடிந்துவிடும். அப்படியானால் தென்புறம் முடிய எவ்வளவு அடி இருக்கும் என்றால் 300 அடி இருக்கலாம்.

19) எங்களது ஊரில் அய்யன் வாய்க்கால், பெருவள வாய்க்கால் ஆகியவற்றை பயன்படுத்தும் நபர்கள் சந்து வழியாக வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், மேற்படி வாய்க்காலுக்கும், சிதம்பரம் நகருக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல, அது தான் சந்து. மேற்படி சந்து எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் நான் கிரையம் பெற்ற பிறகு. மேற்படி உட்பிரிவு செய்யப்பட்டதாக நான் சொல்லும் புல

எண் என்ன என்றால் புல எண்.15AB1.

20) எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி சந்து 15/A1B2 என உட்பிரிவு செய்யப்பட்டதாக நான் சொல்லவில்லை என்றால் எனக்கு நியாபகம் இருந்த வரை சொன்னேன். அப்படியானால் மேற்படி சங்கதியை எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்யும் போது நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஜெயக்குமார் எப்போது சொத்து வாங்கினார் என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதி எப்போது வழக்கு தாக்கல் செய்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

21) ஜெயக்குமார் எங்ககு குடியிருக்கிறார் என்றால் பூனாம்பாளையத்தில் அவரது வீடு தெரியும், முகவரி தெரியாது. ஜெயக்குமார் தற்போது சிதம்பரம் நகரில் குடியிருந்து வருவதாக நான் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் தவறு தான். எனக்கு இவ்வழக்கை பற்றி எப்போது தெரியும் என்றால் சந்தை அடைத்த பிறகு, சுமார் 10 வருடங்களுக்கு முன்பு. குறிப்பாக எந்த மாதம், வருடம் என்றால் அது தெரியாது.

22) 2010–2011 லேயே 4 அடி சந்தை அடைத்து விட்டாதாக நான் சொன்னால் அது சரியா என்றால் நியாபகம் இல்லை. நான் சொல்வது போல் சந்து எதுவும் இல்லை என்றாலும், அதனால் தான் அதனை பொறுத்து எனக்கு நியாபகம் இல்லை என்றாலும் சரியல்ல. சந்தை அடைத்துவிட்டதாக ஜெயக்குமாரிடம் கேட்டது யார் என்றால் பொது மக்கள். குறிப்பாக பெயர் சொல்ல முடியுமா என்றால் நான் தான் கேட்டேன். வேறு எவரும் கேட்டார்களா என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது.

23) அப்படியானால் எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் சிதம்பரம் நகரில் குடியிருந்து வரும் மக்களும், மேற்படி சந்தை பயன்படுத்தும் மக்களும் கேட்டபோது ஜெயக்குமார் உங்களால் ஆனதை பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னதாக நான் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை யார் சொன்னது என்றால் பொதுவாக கேட்டதை வைத்து சொன்னேன். மேற்படி விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியும், ஆனார் பெயர், ஊர் தெரியாது. நான் சொல்வது போல் உண்மையாகவே பொதுமக்கள் கேட்டிருந்தால், நான் குறிப்பாக அவர்களது பெயரை சொல்லியிருப்பேன் என்றாலும், பொய் என்பதால் தான் என்னால் குறிப்பாக சொல்லமுடியவில்லை என்றாலும், நான் ராஜீபிள்ளையுடன் சேர்ந்துக்கொண்டு அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

24) ஜெயக்குமார் முதலில் 4 அடியும், பின்னர் வாதிகளுக்கு சொந்தமான 2 அடியையும் ஆக்கிரமித்துள்ளதாக நான் சொல்வது உண்மையாக இருந்தால் அதை பொறுத்து அவர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மனைஎண்கள்.68,69 ற்கு தென்புறத்தில் யாரும் குடியிருக்காததால் அங்கு பாதை என்று ஒரு அமைப்பு இல்லை என்றாலும், யாரும் அங்கு வரவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல.

25) ஜெயக்குமார் அவர் கிரையம் பெற்ற காலத்தில் இருந்தே தென்புறத்தில் 71 அடியும், வடபுறம் 76 அடியும் கொண்ட நிலத்தை

அனுபவித்து வருவதால் பொதுமக்களிடம் அவ்வாறு பேச வேண்டிய அவசியம் ஜெயக்குமாருக்கு இல்லை என்றால் சரியல்ல. எனக்கும், வாதிக்கும், சிதம்பரம் நகர் மக்களுக்கும், சிதம்பரம் நகர் மனை பிரிவில் தென்வடலாகவும், கிழமேலாகவும் 22 அடி அகலத்தில் சாலை உள்ள நிலையில், பிரதிவாதிகள் நிலத்தில் உள்ளதாக கூறும் சந்து வழியாக பொதுமக்கள் நடந்து சென்றதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

26) வாதி தான் விட்டதாக கூறும் 2 அடி அகல இடத்தில் சன்சைடும், சுவரும் வைத்துள்ளதால், வாதி எவ்வித இடமும் விடவில்லை என்றால் சரியல்ல. மனை எண்.68,69 ல் பொது சந்து என்று எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கும், எனக்கும் தனியாக பாதை உள்ள நிலையில், பிரதிவாதிகளிடம் பாதை உரிமை கோர சட்டப்படிக்கோ, வசதியுரிமை படிக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.